தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, வைகாசி 31, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூன் 14, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> "மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
> காடும் உடையது அரண்."

மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், குளிர்ச்சியான நிழலைத் தரும் மரங்கள் நிறைந்த காடும் ஆகிய நான்கும் உடையதே இயற்கையாய் அமைந்த கோட்டை ஆகும்.

1. இரங்கற்குறிப்புகள்

(அ) முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. செ. ஆறுமுகம் அவர்கள் 29-3-2017 அன்றும், திரு. அ. தங்கராசு அவர்கள் 21-4-2017 அன்றும், திரு. த. ஆறுமுகம் அவர்கள் 29-4-2017 அன்றும், திரு. என். பெரியசாமி அவர்கள் 26-5-2017 அன்றும், திரு. சி. சுப்பிரமணி என்கிற சிசு. மணி அவர்கள் 10-6-2017 அன்றும் மற்றும் திரு. ஆ. நடராசன் அவர்கள் 13-6-2017 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. ஆறுமுகம் அவர்கள், 1991 முதல் 1996 வரை வானூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. அ. தங்கராசு அவர்கள், 1989 முதல் 1991 வரை காட்டுமன்னார்கோவில் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. த. ஆறுமுகம் அவர்கள், 1977 முதல் 1980 வரையிலும், 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1989 முதல் 1991 வரையிலும் அரியலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. என். பெரியசாமி அவர்கள், 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் தூத்துக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி அவர்கள், 1996 முதல் 2001 வரை திருவள்ளூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஆ. நடராசன் அவர்கள், 1977 முதல் 1980 வரையிலும், 1985 முதல் 1988 வரையிலும், 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் பேரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திரு. இரா. செழியன், நாடாளுமன்ற முன்னாள் முதுபெரும் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முதுபெரும் அரசியல்வாதியும், சிறந்த கல்வியாளரும், சமூக நீதிக்காக தொடர்ந்து பாடுபட்டவரும், மறைந்த முன்னாள் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனின் இளைய சகோதரருமான திரு. இரா. செழியன் அவர்கள் 6-6-2017 அன்று தனது 94-வது வயதில் இயற்கை எய்தியது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*